NOOLAHAM FOUNDATION

**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை –டிசெம்பர் 2016**

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2016 டிசம்பர் மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| **வகை** | **எண்ணிக்கை** | **பக்கங்கள்** |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 1030 | 18090 |
| கையெழுத்துப் பிரதி | 02 | 102 |
| பக்கம் சிதைந்தவை | 07 | 96 |
| பக்கம் தவறியவை | 12 | 134 |
| மொத்தம் | **1051** | **18,422** |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணவாக்கப்பட்டவற்றில் 349 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
- ஆவணங்களின் முக்கியத்துவம் உணர்ந்து பக்கங்கள் சிதைந்த, தவறிய ஆவணங்களும் மின்வருடப்பட்டன
- வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டவற்றில் 30 ஆவணங்களிற்கு நிர்வாக விபரத்தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- ஆவணவாக்கலில் ஆசிரியர்கள் மற்றும் பதிப்பாளர்களான தில்லைநாதன், திருநாவுக்கரசு, சாள்ஸ், செல்வமனோகரன், ஜனகமகள், லலீசன் ஆகியோரின் சேகரிப்புக்களும், வெளியீடுகளும் ஆவணவாக்கப்பட்டுள்ளது. ஆவணங்களைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- டிசெம்பர் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.
    - வெளியீட்டாளர்கள்
        - தனு வெளியீட்டகம்
    - எழுத்தாளர்கள்
        - சந்திரா தனபாலசிங்கம்
        - க.ஈஸ்வரநாதபிள்ளை
        - சி.கந்தசாமி
        - தி.மயூரகிரி
        - அ.அஜந்தன்
        - க.கமலநாதன்
        - க.தர்மகுலசிங்கம்
        - பா.தனபாலன்
        - வி.பிரதீபன்
        - ந.மயூரருபன்
        - ச.லலீசன்
        - அ.விஜயநாதன்
        - எஸ்.கிருஷ்ணகாந்தன்
        - க.சின்னராசன்
        - ந.பார்த்தீபன்
        - எஸ்.பாரதி
        - சு.மகேஸ்வரன்
        - க.முருகதாஸ்
        - தேவகாந்தி ஞானசூரியன்
        - க.தவமணிதாசன்
        - க.பேரின்பதாசன்
        - வை.கந்தசாமி

**வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம்**

வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் தொகுக்கும் பணியில் முன்னர் உள்ளிடப்பட்டிருக்கும் ஆளுமை விபரங்களில் மேலதிக விபரங்களை இணைக்கும் பணி இம்மாதம் இடம்பெற்றது. ஜூன் மாதத்திலிருந்து இம்மாதம் வரைக்கும் இச்செயற்றிட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இருந்த நிலையில் இம்மாதத்துடன் இச்செயற்றிட்டம் முடிவடைகிறது.

**ஆளணி (Human Resource)**

வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் தொகுக்கும் பணியில் இணைக்கப்பட்ட செயற்றிட்ட ஊழியர் ஆறுமாத கால செயற்றிட்டம் என்ற அடிப்படையில் இம்மாதத்துடன் தனது பணியினை நிறைவு செய்கின்றார்.

**வரவு செலவு அறிக்கை**

- டிசெம்பர் மாதத் தேவைகளுக்காக ரூ. 540,027.84 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 296,385.00, வாடகை 21,101.00, தொலைபேசி மற்றும் இணையம் 11,526.34, யாழ் புது அலுவலகத்திற்கான வாடகை முற்பணம் 150,000.00, வருடாந்த ஊழியர் மற்றும் தன்னார்வலர்கள் ஒன்றுகூடல் 16,492.00 மற்றும் ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன.
- டிசெம்பர் மாதம் ஐக்கிய இராச்சிய பங்களிப்பான ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோயிலின் மூலம் 368,000.00 ரூபாவும் அவுஸ்திரேலிய அன்பர்கள் ஊடாக 151,290.00 ரூபாவும் இலங்கையில் இருந்து 1000.00 ரூபாவும் ரூபாவும் நன்கொடையாக கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.